# M12 படிப்படியாக ஒரு கட்டுரையினைத் திட்டமிடல், எழுதுதல், மீளாய்வு செய்தல்

## படிமுறை 1

### உங்கள் தலைப்புக்கு நல்ல கருத்துக்களைக் கண்டுபிடியுங்கள்!



நடைபெறக்கூடியவை :

- ஒரு தாளை அல்லது ஒரு தாளின் பல்வேறு சிறு துண்டுகளை எடுக்கவும். உங்கள் தலைப்புப் பற்றி உங்களுக்குத் தோன்றுவனவற்றை எல்லாம் எழுதவும். உங்களுக்கு எளிதாக இருக்கும் என்றால், உங்கள் பள்ளி மொழியில் குறிப்புகளை எழுதலாம்.
- உங்களுக்கு நேரம் இருந்தால்: தலைப்பைப் பற்றி வெவ்வேறு மக்களுடன் உரையாடவும். அவர்களது கருத்துக்களை எழுதுங்கள்.
- உங்களுக்கு ஏற்கனவே இந்த உத்திகள் தெரிந்தால், ஒரு மன வரைபடம் அல்லது ஒரு விளக்கப்படத்தினை உருவாக்கவும்.

## படிமுறை 2

### கருத்துகளை வரிசையாக ஒழுங்குபடுத்தவும், உங்கள் கட்டுரையின் கட்டமைப்பைத் திட்டமிடுங்கள்




- உங்கள் குறிப்புகள் அல்லது தாள் துண்டுகளைப் பாருங்கள். உங்களால் பயன்படுத்த முடியாதனவற்றை வெட்டி விடவும்.
- ஒரு தாள் எடுத்து, பின்வரும் மூன்று துறைகளாகப் பிரிக்கவும்
  - அறிமுகம்/கண்ணோட்டம்
  - பெரிய பகுதி (பெரிய துறை!)
  - நிறைவு/சுருக்கம் ஒவ்வொரு பெட்டியிலும் அங்கு பொருத்தமான கருத்துக்களை எழுதவும். அதில் இதுவரை என்ன இல்லை என்பதை எண்ணிப் பார்த்து, அதனை கட்டுரையில் சேர்க்கவும்.
- நீங்கள் உங்கள் கட்டுரையை அல்லது கதையை ஓரளவு கற்பனை செய்து, முடிக்கும் வரை இந்த நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபடவும்.
- மேலும் உங்கள் கட்டுரையை எவ்வாறு வடிவமைப்பது என்பது பற்றி எண்ணவும் (ஒரு தாளில், கணினியில் வரைபடங்களாக ...).

## படிமுறை 3

### உங்கள் கட்டுரையின் வரைவினை எழுதுங்கள்

- எழுத்துரையை எழுதவும்
- மாதிரியைப் படிக்கவும். கட்டமைப்புச் சரியாக இருக்கிறதா? இவ்வேளையில் சில சொற்களை, வடிவங்களை அல்லது வாக்கியங்களை மேம்படுத்த நீங்கள் விரும்புகிறீர்களா?

## படிமுறை 4

### ஒரு கவர்ச்சியான தலைப்பையும் தொடக்கத்தையும் கண்டுகொள்ளுங்கள்

- ஒரு நல்ல தலையங்கத்துடன் உங்களால் வாசகர்களை அல்லது கேட்பவர்களை மிகவும் கவர முடியும். எடுத்துக்காட்டாக "நான் மூழ்கிக்கொண்டிருக்கிறேன் உதவுங்கள்!" என்பது "என் விடுமுறை சாதனை" என்பதை விட மிகுந்த உணர்ச்சியுடையதாக ஒலிக்கின்றது.

- அதே போல் கட்டுரையின் முதல் வாக்கியம் அல்லது பந்தி என்பதற்கும் இது பொருந்தும். இங்கே நீங்கள் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் உருவாக்க முடியும். ஒரு கதைக்கு வியப்புள்ள உணர்வூட்டும் அறிமுகம் இன்றியமையாததாகும். ஆனால் உண்மை கட்டுரைக்கு தெளிவான தகவல் வேண்டப்படுகிறது.
- நீண்ட கட்டுரைகளில் அல்லது எடுத்துரைப்புகளில் நல்ல தகவல் இடைத் தலைப்புகள் அமைத்தல் இன்றியமையாததாகும். படிப்பவர்களுக்கு ஒரு கண்ணோட்டம் வழங்க அவை துணைசெய்கின்றன.

---

படிமுறை **5**

## வரைவினை மீள்பார்வை செய்யவும்

- இரண்டு அல்லது மூன்று மாணவத் தோழர்கள் தம்முள் துணைக்கும் அறிவுரைக்குமாக கலந்துரையாடலினை ஒழுங்கு செய்யலாம். இந்த வடிவத்தில், நீங்கள் ஒருவருக்கொருவர் அறிவுரை வழங்க முடியும். அத்துடன் நீங்கள் தனித்தும் உங்கள் கட்டுரையைத் திருத்த முடியும். திருத்தும்போது பின்வரும் கேள்விகள் பயனுள்ளனவாகும்.
  - எனது கட்டுரை முழுமையாக விளங்கிக் கொள்ளக் கூடியதா? மற்றும் கவர்ச்சியுள்ளதா? கருத்துகளைத் தெளிவாக அமைக்க எனக்கு என்ன வேண்டும்? எது நல்லது அல்லது நல்லதல்ல? நான் தலைப்பைப் பின்பற்றியுள்ளேனா?
  - எனது கட்டுரை தெளிவான கட்டமைப்பை உடையதா? (அறிமுகம் / கண்ணோட்டம், பெரும் பகுதி, முடிவு / சுருக்கம்) தொடர்ச்சி தெளிவாயுள்ளதா? நான் கருப்பொருளை விட்டு விலகுவதைத் தவிர்த்துள்ளேனா?
  - ஆர்வத்தையும் உண்மையையும் உருவாக்க அல்லது அது பொருளடக்கத்துடன் தொடர்புடைய தெளிவான தகவலை வழங்குதற்கு, என் கட்டுரையின் தலைப்பை மாற்றியமைக்கலாமா?
  - தொடர்ந்து படிக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தூண்ட, ஒரு கவர்ச்சியான அல்லது தகவல்தரு வாக்கியத்துடன் கட்டுரை தொடங்குகின்றதா? அதனை எப்படி நான் முன்னேற்றமுடியும்?
  - ஒவ்வொரு வாக்கியமும் விளங்கிக் கொள்ளக் கூடியதா? வடிவங்கள், தொடர்கள் தொடர்பாக அவை சரியா? தெளிவில்லாதவற்றைக் கோடிடவும். ஆசிரியர் அல்லது கட்டுரை வல்லுநர் ஒருவரிடம் கேட்டுத் தெளியவும்.
  - நான் தெளிவான மற்றும் சரியான சொற்களைத் தெரிவு செய்தேனா? நான் ஒன்றைத் திரும்பத் திரும்ப எழுதவில்லையே? எழுத்துக்கூட்டல் சரியா (அகரமுதலியை அணுகவும்)?



---

படிமுறை **6**

## இறுதி கட்டுரைப் பதிப்பை உருவாக்கவும்

- உங்கள் கட்டுரை தொடர்பாக படிப்பவர்களைக் கவர்வதாகவும் கேட்பவர்களுக்கு உணர்வூட்டுவதாகவும் அமைவதை உறுதிப்படுத்தவும்.
- புதிய வடிவங்களுடனும் செய்முறைத்தேர்வு செய்க (படங்களுடன் வடிவமைப்பு அல்லது பல்கருவிக் கலைப்பொருள், கணினியுடன், ஒலி உரையுருவாக (ஒலிக்கோப்பு) முதலியன)